**ஜா-எல நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 08 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து ஜா எல நகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 18,345,000 பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் பெறுமதி ரூபா 55,495 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிலையான சொத்து பெறுமதி ரூபா 37,169,422 ஆகக் காட்டப்பட்ட போதிலும் மொத்த ஆக்கப் பொருட் செலவீனம் மற்றும் நன்கொடை ஆகிய 02 கணக்கினதும் மொத்தப் பெறுமதி ரூபா 37,052,047 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்ட நிலையான சொத்து ரூபா 1,306,560 ஆகக் காட்டப்பட்ட போதிலும் வருடாந்த செலவுக் கணக்குப் பகுப்பாய்வின் படி மூலதனமாக்கிய சொத்து ரூபா 1,262,765 ஆகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்தமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 02 ஒப்பந்த வேலைகளிற்காக ரூபா 1,215,642 கொடுக்க வேண்டியிருந்த போதிலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடந்த வருட கணக்காய்வு அறிக்கையில் சபை உறுப்பினர்களுக்கு வழங்கிய தொலைபேசி கட்டணத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 25,352 பெறுமதியானது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட போதிலும் அத் தொகை மீளாய்வாண்டில் வைப்புக் கணக்கில் இருந்து சீர் செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு டிசெம்பர் மாதத்தில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரித் தொகை ரூபா 316,609 கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும் அந்த நிறுவனத்தின் பெறுமதி சேர் வரி நீக்கப்பட்டு இருந்ததனால் இது நம்பகத்தன்மையற்ற கொடுக்கவேண்டிய கொடுப்பனவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) பொதுச் சந்தையில் 40 ஆம் இலக்க பன்றி இறைச்சி கடைக்கு 2015 பெப்ரவரி மாதத்தில் வாடகை ரூபா 45,875 பெறுமதி கூடுதலாகப் பற்றுச்சீட்டு இடப்பட்டமையால் கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானக் கூற்றில் குறித்த தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ) பெற வேண்டிய களியாட்ட வரிக்கான பற்றுச்சீட்டானது ரூபா 1,883,222 பெறுமதியில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,687,245 பெறுமதியில் பற்றுச்சீட்டு இடப்பட்டமையால் கிடைக்க வேண்டிய ரூபா 195,977 களியாட்ட வரி கணக்குகளிலும் வருமானக்கூற்றிலும் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) அடுத்து வரும் வருடத்திற்கான கடைவாடகை ரூபா 1,897 கிடைக்கப்பெற்றுள்ளபோதிலும் கணக்குகளில் முந்திக் கிடைத்த வருமானமாக ரூபா 134,395 காட்டப்பட்டதனால் ரூபா 132,498 முந்திக் கிடைத்த வருமானம் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வாண்டில் 03 ஒப்பந்தங்களிற்காக கிடைக்க வேண்டிய மூலதன மானியம் ரூபா 1,709,764 ஆனது 2016 ஆம் ஆண்டில் கிடைத்த போதிலும் அந்தத் தொகையால் கிடைக்க வேண்டிய மூலதன மானியக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கிடைக்க வேண்டிய மூலதன மானியம் 2014 இல் இருந்து கணக்குகளில் ரூபா 6,204,193 ஆனது காட்டப்பட்ட போதிலும் அந்தந்த தொகை கிடைக்காமையினால் கணக்குகளில் தவறான சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

(க) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய குப்பை வரி ரூபா 93,540 ஆனது கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கா) 2015 டிசெம்பர் 31 இற்கு நிலையான சொத்துக் கணக்கின்படி மீதி ரூபா 31,759,726 எனக் காட்டப்பட்ட போதிலும் வங்கி நிலையான வைப்புத் துண்டின் பிரகாரம் மீதி ரூபா 29,670,727 ஆகக் காட்டப்பட்டதனால் ரூபா 2,088,999 வித்தியாசம் காணப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

கூட்டுமொத்தத் தொகை ரூபா 47,127,372 கொடுக்கல் வாங்களிற்கான பேரேடு உப பேரேடு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

### 1.3.3 சமப்படுத்தப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 எண்ணிக்கையுடைய கணக்குகளில் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மொத்தத் தொகை ரூபா 15,310,679 எனக் காட்டப்பட்டுள்ள போதிலும் அதற்காக உள்ள பேரேடுகளின் பிரகாரமான மொத்தத் தொகை ரூபா 18,320,028 எனக் காட்டப்பட்டதனால் ரூபா 3,009,349 வித்தியாசம் காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) பிடித்து வைத்திருந்த நிலையான வைப்புக் கணக்கின் படி கிடைக்க வேண்டிய கணக்கு மீதி ரூபா 46,863 ஆன தொகை 05 வருடங்களிற்கு முன்பு இருந்து நிலையாக இருப்பதனால் இதனைத் தீர்வு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி சபைக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 1,826,536 என 03 வருடங்களிற்கு முன்பு இருந்து காட்டப்பட்ட போதிலும் தீர்வு செய்வதற்கு ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த வருடத்திற்காக செலுத்த வேண்டிய சில்லறைக் கடனாளிகள் கணக்கிலிருந்து இந்த வருடத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட பின் ரூபா 23,470,782 கடந்த வருடத்திற்காக இன்னும் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட போதிலும் இன்று வரை செலுத்தப்படாதிருந்தது. அத் தொகைக்கான உப பேரேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 1.3.5 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நகரசபை கட்டளைச் சட்டம் (255 அதிகாரம்) 170(1), 170(2) பிரிவின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வரிகள் மற்றும் தண்டங்களிற்கான பணம் பெற்றுக்கொண்டு நகரசபை அரசிறைக் கணக்குகளில் வரவு வைக்க ஏற்பாடு செய்வது நகரசபை செயலாளரின் கடமையாக இருந்த போதிலும் ரூபா 16,872,919 ஆன தொகை கிடைக்க வேண்டிய ஆதனவரிக்காக பிடிவிறாந்து பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகரசபை கட்டளைச் சட்டம் (255 அதிகாரம்) 170 (அ) (1) இன் பிரிவின் பிரகாரம் ரூபா 18,817,812 பெறுமதியான கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 371 (2) (அ) (இ) இன் படி கட்டுநிதி முற்பணம் வழங்கும் போது பதவிநிலை அலுவலர்களிற்கு மட்டும் வழங்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 95,301 ஆன தொகை உப கட்டுநிதி முற்பணம், வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த தொகை 09 வருடம் தொடக்கம் 16 வருடத்திற்கும் கூடுதலாக தீர்வு செய்யப்படாமல் இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 51,471,375 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 19,177,998 ஆக விளைந்திருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றின் விபரம் பின்வருமாறு.

| | வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|---|
| (i) | வீதவரிகள் மற்றும் பற்றாணைக் கட்டணம் | 20,770 | 19,769 | 16,873 |
| (ii) | வாடகைகள் | 9,905 | 7,405 | (1,553) |
| (iii) | உரிமங்கள் | 528 | 879 | 116 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 40,211 | 56,039 | 8,002 |

### 2.2.2 ஆதனவரி சேகரிப்பின் செயன்முன்னேற்றம்

கணக்காண்டு முடிவில் ஆதனவரி ஆதனத்தை சட்டப்படி தடைசெய்யும் உத்தியோகத்தர்கள் சேவையில் இல்லாதிருந்ததுடன் 2014 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரைக்கும் கிடைக்க வேண்டிய ஆதனவரி சேகரிப்பின் செயன்முன்னேற்றம் 0 வீதம் தொடக்கம் 11 வீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்

(அ) நிலையான வைப்புப் பேரேட்டின் படியும் உப பேரேட்டின் படியும் ஆரம்ப மீதி வித்தியாசம் ரூபா 4,089,963 ஆகக் காட்டப்பட்ட போதிலும் இனங்காணப்படாத மற்றும் அனுமதியளிக்கப்படாத 15 எண்ணிக்கையான நாட்குறிப்புப் பதிவுகள் திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் பிணைப வைப்புக் கணக்கின் படியும் உப பேரேட்டின் படியுமான ஆரம்ப மீதி வித்தியாசம் ரூபா 11,615 எனக் காட்டப்பட்ட போதிலும் இனங்காணப்படாமல் நாட்குறிப்பு இலக்கம் 17 இன் படி ஊழிய பிணை வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) சபையின் மீளாய்வாண்டில் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கின்படி ரூபா 13,659,283 என சாதாரண மாதாந்தக் காசு காணப்பட்ட போதிலும் சபையினால் மேலதிகமாகவுள்ள பணத்தை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 580,530 என மீதி 04 வருடங்களிற்கு மேலாக பாவிக்காமல் காணப்பட்ட போதிலும் இந்தப் பணத்தை நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்க வேண்டிய மின்சாரக் கட்டணம் மீதி ரூபா 1,110,620 ஆனது நீண்ட காலமாகக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. இதனை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இத்தொகையானது தனியார் மின்சாரக் கம்பனிக்கு வழங்கப்பட்ட சொத்துக்களுடன், இப்பணத்தை சேகரிப்பதற்கு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கை பேலியாகொடை நகரசபையானது தீர்மானம் ஒன்று மேற்கொண்டு பங்குகளை கொள்வனவு செய்ததன் விளைவாக அதற்கு ஒரு வருடத்திற்கு பங்குலாபமாக ரூபா 1 இலட்சத்துக்கு மேல் உழைத்திருந்தது. இப்படியான நடவடிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு அலுவலர்களிற்கு போதிய அறிவின்மை காணப்பட்டது.

## 3.3 செயலாற்றல்

----------------

நகரசபை எல்லைக்குட்பட்ட தனியார் வீதியினைக் காண்பதற்கு பதிவேடு ஒன்று பேணப்படாமையால் வடிகால் திருத்துவதற்றும் பேணுவதற்கும் திட்டமிட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டில் இதேமாதிரி வடிகாலமைப்புத் திருத்தம் செய்வதற்கு மற்றும் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

----------------------

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 38 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 10,000 இற்கு மேல் செலவு செய்த ஒப்பந்தம் ஒன்று செய்யப்படல் வேண்டும். அதில் 40 ஆம் பிரிவின் படி ஏதேனும் வேலை ஒன்று செய்யும் போது வழங்குனர்களும் ரூபா 10,000 இற்கு மேல் செலவு செய்யும் போது விளம்பரம் போட்டு கேள்வி கோர வேண்டியிருந்த போதிலும் ரூபா 388,670 இற்கான ஒப்பந்தத்திற்காக கேள்வி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. மேலும் இந்த ஒப்பந்த வேலைக்கு அளவுத்தாள் மற்றும் மதிப்பீடு செய்யப்படாமல் வேலை செய்பவர்களிடம் அளவுத்தாள் மற்றும் மதிப்பீடு எடுத்து செய்யப்பட்டிருந்தது. பெரும்பாலான ஒப்பந்த வேலைகளிற்கான இறுதிச் சிட்டைகள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 செயற்பாட்டு செயற்றிறனின்மை

----------------------------------------

(அ) 2014 டிசெம்பர் 31 இல் செய்யப்பட்டுள்ள நூலகப் புத்தகங்கள் கணிப்பீட்டுச் சபையின் அறிக்கையின் பிரகாரம் ரூபா 35,405, 228 புத்தகங்கள் காணப்படவில்லை என காட்டப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் அது சம்பந்தமாக எவ்வித நவடிக்கையும் எடுக்கவில்லை.

(ஆ) பாதுகாப்பு சேவை செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட போது உடன்படிக்கையின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் கனிஸ்ட பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர் நல்ல திடகாத்திரமாகவும் வயது 50 இற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சிரேஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் படையினர் / பொலிஸ் உத்தியோகத்தர் சட்டத்தின் பிரகாரம் பதவி விலகி வந்தவர்கள் இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் வேலையில் இணைந்து செய்தமைக்கான ஆதாரம் வழங்கப்படவில்லை.

## 3.6 திண்மக்கழிவு முகாமைத்துவம்

------------------------------------

**மாகாண சபை சட்டங்களிற்கு எதிராக செயற்படுதல்**

------------------------------------------------------------------

2008 யூலை 30 ஆம் திகதிய இலக்கம் 1560/6 சுற்று நிருபத்தில் 2008 இலக்கம் 1 ''திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான சட்டங்கள்'' எல்லா உள்ளூராட்சி சபைகளிலும்

தொடங்க வேண்டும் என்றும் 2010 டிசெம்பர் 21 இல் உள்ளூராட்சி ஆணையாளர் (மேற்கு மாகாணம்) இலக்கம் எல்பிடி/05/08/பொது/தொகுதி கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதிலும் நகரசபை தொடங்கும் போது 18(1),19,22,54 மற்றும் 59 இல் உள்ள சட்டங்களின் நிதியை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையினால் கூடிய கவனம் எடுக்க வேண்டும்

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிர்வாகம்
(உ) ஒப்பந்த முகாமைத்துவம்